1974 மார்ச் 29]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அங்கெல்லாம் உற்பத்தியாகும் திராட்சையைப் பயன்படுத்தி ஒயின் தயாரிக்கும் திட்டம் இருந்துகொண்டிருக்கிறது. அதைப் பொறுத்த வரையில் மத்திய கூட்டுறவு ஸ்தாபனத்திலிருந்து உத்தரவு ஏதும் வரவில்லை. இப்போது நான்கு ஆண்டு களுக்குப் பிறகுதான் நமது நாட்டிலேயே இப்படி பழச்சாற்றை உபயோகிக்கும் பழக்கம் பரவி வருகின்றது. அது நல்லபடி முன்னேற்றமடைந்தால்தான், இதை விரிவுபடுத்தும் யோசனையை நாம் மேற்கொள்ள முடியும்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இந்தப் பழச்சாறு பதனிடும் தொழிற்சாலையில் என்னென்ன பழங்களை உபயோகித்து வருகின்றார்கள்? மேலும் டெக்னீஷியன்ஸை முறையாக பணியில் ஈடுபடுத்தாத காரணத்தினால், நூற்றுக்கணக்கான டன் சாறு பாழாகிவிட்டது என்பது உண்மையா? இப்படி வீணாவதைத் தடுக்க மேல் நடவடிக்கைகள் என்று என்னென்ன அரசு எடுக்க இருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, முதல் கட்டத்திலே இப்படிப்பட்டதொரு நிலை ஏற்பட்டாலும், அடுத்தடுத்து இது திறமையுடன் இயங்க ஆரம்பித்து, இப்போது இதன் உற்பத்திப் பண்டங்களை வெளிநாட்டினரும் விரும்பி வாங்கக்கூடிய அளவிற்கு அபிவிருத்தி ஏற்பட்டிருக் கின்றது. இதை பிற மாநிலங்களிலும் இப்போது விரும்பி வாங்குகின்றார்கள். நல்ல சாறு இப்போது தயாரிக்கப்படுகிறது என்று தெரிவித்துக்கொள்ளு கிறேன்.

Price of Rice

* 250 *Q.*—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether it was decided to raise the price of rice at the Chief Ministers' Conference held at New Delhi in September 1973 ; and

(*b*) if so, the action taken by the Tamil Nadu Government thereon?

அரசி கொள்முதல் விலை

திரு. எல். பலராமன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1973 ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதத்தில், புதுடெல்லியில் நடந்த முதல் அமைச்சர்கள் மாநாட்டில், அரிசியின் விலையை உயர்த்தத் தீர்மானிக்கப் பட்டதா ?

(இ) ஆமெனில், அது குறித்து தமிழ்நாடு அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, (அ) ஆம். 1973 செப்டம்பரில் புதுடெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் நெல் விலையை உயர்த்தவேண்டும் என்றும் அந்த விலையை ஒட்டி அரசும் விலையை திருத்தி அமைக்க வேண்டும் என்றும் கருத்து நிலவியது.

(இ) அதைத் தொடர்ந்து மத்திய அரசு 1973–74 பருவத்திற்கு நடுத்தர நெல் விலை ரூ. 70 என்று நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்து அன்றைய தினமே தமிழ்நாடு அரசு 6—10—1973-லிருந்து குறுவை பருவத்திலேயே நடுத்தர நெல் விலை ரூ. 70 என்றும் மோட்டா ரக நெல் ரூ. 66 ஆகவும் உயர்த்தியது. 20—12—1973-லிருந்து நேர்த்தி ரகம் நெல் விலை ரூ. 75 என்றும் மிக நேர்த்தி ரக நெல் விலை ரூ. 78 என்றும் உயர்த்தியது.

(பிற்பகல் 4.40)

திரு. அ. அய்யணன் அம்பலம் : தலைவரவர்களே, நெல் விலை இப்போது இருக்கும் மற்ற விலைகளைக் காட்டிலும் குறைவாக இருப்பதால், தஞ்சை விவசாய மாநாட்டில் நெல்லுக்கு மத்திய சர்க்கார் கூட்டிக் கொடுத்திருந்தாலும், இன்னும் அதிகமாக போனஸ் வழங்க அரசுக்கு எண்ணம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, நெல் விலையை உயர்த்தியிருக்கிறோம். 16—5—1973 வரையில் ரூபாய் 49, 53, 56, 58 என்று இருந்தது. 11—8—1973-க்குப் பிறகு 59, 63, 66, 68 என்று இருந்தது. இப்போது 6—10—1973-க்குப்பின் ரூபாய் 66, 70, 75 என்று உயர்த்தியிருக்கிறோம். இதிலே கூட 75, 78 என்று உயர்த்த வேண்டுமென்று நாம் தான் கேட்டிருக்கிறோம். இன்னும் கூட மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் வரவில்லை யென்றாலும், அதிகம் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். 36 சதவீதம் நெல் விலையை உயர்த்தியிருக்கிறோம். நாம் அரிசியை முக்கியமாகப் பயன்

படுத்துகிறவர்கள். இதையும் அதிகமாக ஏற்றிவிட்டால் வாங்குகிற மக்களுக்குக் கஷ்டம் ஏற்படும். இன்றைக்கு எந்த அளவிற்கு மற்ற காரியங்களில் அபிவிருத்தி செய்ய முடியுமோ அதைத் தான் செய்துகொண்டு வருகிறோம். விலை அதிகமாகக் கொடுக்கிற காரணத்தினால், போனஸ் போன்றவைகள் அதிகமாகத் தேவையில்லை.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, இந்த நெல் விலையை ஏற்றும் போது சன்னரக நெல் அதிகமாக மகசூல் ஆகாத காரணத்தினால், அதற்கென விலையை உயர்த்த அரசு பரிசீலிக்குமாவென்று அறிய விரும்புகிறேன். நுகருகிறவர்கள் ஏழ்மையானவர்கள், அதனால் விலையை ஒரே மட்டத்தில் வைத்திருக்கிறோம் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதே முறையில் பயிரிடுபவர்கள் சாதாரண மக்கள் என்ற முறையில் அவர்கள் மீது அனுதாபம் அரசு வைக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, அவர்கள் மீது அனுதாபம் வைத்த காரணத்தினால் தான், இப்போது 36 சதவீதம் விலையை ஏற்றியிருக்கிறோம். இன்றைக்கு ஏழை எளிய விவசாயிகளுக்கு லாபம் வர வேண்டுமென்று தான் 36 சதவீதம் உயர்த்தியிருக்கிறோம். முன் பெல்லாம் 50 சதவீதம் விலை உயர்த்திருந்தாலும், அதை அனுபவித்தவர் களெல்லாம் ஒரு சில பெரிய நிலச்சுவாந்தார்கள் தான். அவர்கள் தான் அனு பவித்துக்கொண்டு வந்தார்கள். இப்போது சாதாரண விவசாயிகள் தான் இந்த 36 சதவீத விலை உயர்வை அனுபவிக்கிறார்கள். இப்போது 91 ஆயிரம் டன் குறுவை நெல் கொள்முதல் செய்திருக்கிறோம். இந்தக் கொள்முதலிலே சாதாரண விவசாயிகள் இருக்கிறார்கள் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகி றேன். வாங்குபவர்களையும், விற்பவர்களையும் சமமாகப் பார்க்கிறோம் என்று சொல்கிறோம். வாங்குபவர்களை மட்டும் கவனிக்கிறோம், விற்பவர்களைக் கவனிக்கவில்லை என்று உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். விற்பவர்களைக் கவனிக்கவில்லை என்ற நிலை இல்லை. மற்ற பொருள்களின் அளவிற்கு இதை உயர்த்த முடியாது என்ற நிலையை மட்டும் தான் சொன்னேன்.

THIRU A.R. DAMODARAN: Sir, in view of the fact that the wheat price has been increased to Rs.105 per quintal and also considering the cost of fertiliser, the cost of labour, and the power-

cut that has been imposed resulting in increased cost of cultivation of paddy-growers, may I know from the Government whether they are against increase in prices for paddy-growers even if the Government of India should suggest it?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இப்போது அவர்கள் கோதுமையைப்பற்றி விவாதித்து முடிவு செய்திருக்கிறார்கள். நான் அதற்குத் தான் சொன்னேன். ரூபாய் 73, 75 ஆக இருந்ததை ரூபாய் 75, 78 என்று கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறோம். நாங்களும் கூடிய வரையிலே விவசாயிகள் வாங்கக் கூடிய உரம், மற்ற பொருள்கள் விலை இவைகளை வைத்துத் தான் நிர்ணயித்துச் சொல்லியிருக்கிறோம். மத்திய சர்க்கார் இதைப்பற்றி விவாதத்தில் இறங்கவில்லை.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, அரசாங்கம் நிர்ணயிக்கும் விலை கூட விவசாயிகளுக்குக் கிடைக்க முடியாத அளவிற்கு ஆங்காங்கே அறுவடை யானவுடன் நெல்லை விலைக்கு வாங்காமல் தாமதப்படுத்துவதனால் தனிப்பட்ட வியாபாரிகள் குறைந்த விலைக்கு விவசாயிகளிடமிருந்து நெல்லை வாங்கிப் போவது என்ற நிலை இருக்கிறது. அப்படி இல்லாமல் தாமதமின்றி உடனுக் குடன் விவசாயிகளின் நெல்லை வாங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இதைத் தான் நான் முன்னே சொன்னேன். மதிப்பிற்குரிய எதிர்க் கட்சித் தலைவரவர் கள் சொல்வது முன் காலத்தில் இருந்தது என்பதை முன்பே சொல்லி விட்டேன். இப்போது கிட்டத்தட்ட சம்பா காலத்திலே ஒரு லட்சம் டன் அளவிலே கொள்முதல் செய்திருக்கிறோம். இப்போது நிச்சயமாக எந்த ஒரு விவசாயியும் இந்த 70 ரூபாய், 73 ரூபாய் அல்லது 75 ரூபாய்க்குக் குறைந்து விற்றிருக்க முடியாது. தஞ்சை மாவட்டத்தில் இந்த நிலைமை அதிகமாக ஏற்படும் என்ற காரணத்தினால், நூற்றுக்கணக்கான கொள்முதல் செய்யும் நிலையங்களை மத்திய சர்க்காரின் எப்.சி.ஐ. மூலமாகவும், மாநில சிவில் சப்ளை கார்ப்பரேஷன் மூலமாகவும், தாசில்தார், மற்ற அலுவலர்களை வைத்து கொள் முதல் செய்திருக்கிறோம். மற்ற மாவட்டங்களிலே எங்கேயாகிலும் விலை குறை கிறது என்று செய்தி வந்தால், உடனடியாக இந்த நிலையங்களைத் தோற்று வித்து கொள்முதல் செய்திருக்கிறோம். இப்படிப்பட்ட குறை கவனத்திற்கு வரவில்லை. விலை ஏறுகிறது என்ற குறை தான் கவனத்திற்கு வந்திருக்கிறதே தவிர, நிச்சயமாக இந்த ஆண்டைப் பொறுத்தவரையில், எந்த விவசாயியும் நெல்லைக் குறைத்து விற்கிற நிலைமை தமிழகத்தில் ஏற்படவில்லை.

1974 மார்ச் 29]

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: தலைவரவர்களே, நெல் தஞ்சாவூரிலே லெவி முறையிலே வாங்கப்படுகிறது. நெல்லுக்கு அதிக விலை கொடுத்தாலும் கூட, சமீப காலத்திலே ஒரு மாதத்திற்குள்ளாக 60 படி மூட்டை 60 ரூபாய்க்கு 70 ரூபாய்க்கு விற்றது இப்போது 75, 80 ரூபாய் என்று கிராமங்களில் விருது நகர் பக்கங்களில் விற்கிறது. இவ்வளவு விலை உயர்த்திக் கொடுத்தாலும் கூட, லெவிக்கு உங்களுக்குக் கொடுக்கிறவர்கள் லாபம் அடைகிறார்களா என்பதைச் சொல்ல முடியுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, வியாபாரிகளே லாபத்திற்காகத் தான் வியாபாரம் செய்கிறார்கள். எந்த அளவிற்குக் கிடைக்கச் செய்ய வேண்டுமோ அதற்காக லெவி போட்டிருக்கிறோம். வியாபாரிகள் அதிகமான அளவில் கொள்ளையடிக்காத அளவிற்குப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

THIRU A.R. DAMODARAN: Sir, are the Government aware that because of the low procurement price fixed for paddy, the open-market price of paddy is about 40 to 50 per cent above the procurement price resulting in a great deal of hardship to the average consumer?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இதற்காகத் தான் லெவி போடுவது. லெவி விலையை விட ஓபன் மார்க்கெட் விலை ஜாஸ்தியாகப் போய்விடுகிறது. கொள்முதல் செய்வதற்கு, இந்த விலைக்குக் கிடைக்கவில்லை என்ற நிலைமையில் தான் லெவி போடுகிறோம். நாம் திடீரென்று லெவி போடுவதே, விலைகளை அட்ஜஸ்ட் செய்வதற்குத் தான். அந்த நோக்கத்தோடு தான் செய்துகொண்டிருக்கிறோம். அதையும் மீண்டும் மீண்டும் சொல்கிறேன். எங்கு விலை ஏறினாலும் குறைவதற்கான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

Foreign Exchange Loan

† 226 *Q.*—THIRU L. BALARAMAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Reserve Bank of India has informed the Tamil Nadu Industrial Investment Corporation Limited about the availability of foreign exchange loan from the Reserve Bank of India; and

† *27—3—1974 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.*